பாரம்பரிய சுருக்குமடி வலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி கடல்சார் மக்கள் நல சங்கமம் சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். படம்: ம.பிரபு

சுருக்குமடி வலை மீன்பிடிப்புக்கு அனுமதி கோரி

சென்னையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

● சென்னை

சுருக்குமடி வலை மீன்பிடிப்புக்கு அனுமதி கோரி சென்னையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே கடல்சார் மக்கள் நல சங்கமம் அமைப்பு சார்பில் சுருக்குமடி வலை மீன்பிடிப்புக்கு அனுமதி கோரி நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழகம் முழுவதிலும் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் இருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் சுருக்குமடி வலையைப் பயன்படுத்தி மீன் பிடிக்க தமிழக அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று கூறி முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் குறித்து கடல்சார் மக்கள் நல சங்கமம் அமைப்பின் பொது செயலாளர் பிரவீன்குமார் கூறியதாவது:

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சுருக்குமடி வலைக்கு அனுமதியளிக்கும் போது தமிழகத்தில் மட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சுருக்குமடி வலையினால் மீன்களின் உற்பத்திக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய, மாநில அரசுகளின் ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது.

சுருக்குமடி வலை தடையினால் மயிலாடுதுறை, கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் 15 லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சுருக்குமடி வலை தடையை நீக்க கோரி அதிகாரிகளிடம் முறையிட்டு எந்த பலனும் இல்லை.

அதனால், அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எங்களுடைய கோரிக்கையை அரசு நிறைவேற்றும் என்று நம்புகிறோம். கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து முடிவு எடுப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இன்று குடிநீர் வாரிய குறைதீர் கூட்டம்

● சென்னை

சென்னை குடிநீர் வாரியத்தின் குறைதீர் கூட்டம், 15 பகுதி அலுவலகங்களிலும் இன்று நடைபெறுகிறது.

இது தொடர்பாக சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை குடிநீர் வாரியம் சார்பில், ஒவ்வொரு மாதமும் 2-வது சனிக்கிழமை குறைதீர்க்கும் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாதத்துக்கான குறைதீர்க்கும் கூட்டம் இன்று (அக்.8) காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை குடிநீர் வாரியத்தின் 15 இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறைதீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

எனவே, இந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் தொடர்பான பிரச்சினைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவிக்கலாம். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால் பணிகள் 85 சதவீதம் நிறைவு

● நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நேரு தகவல்

● சென்னை

சென்னையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 85 சதவீதம் முடிந்துள்ளது என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

சென்னை மாநகராட்சி, ராயபுரம் மண்டலத்துக்கு உட்பட்ட போஜராஜன் நகர், கண்ணன் தெருவை இணைக்கும் வகையில், ரூ.13.40 கோடியில் சுரங்கப் பாதை அமைக்கும் பணி தொடக்க விழா போஜராஜன் நகரில் நேற்று நடைபெற்றது.

அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு ஆகியோர் பணிகளைத் தொடங்கிவைத்தனர். இந்த சுரங்கப் பாதையின் நீளம் 207 மீட்டர், அகலம் 6 மீட்டர். இதில் 37 மீட்டர் ரயில்வே நிர்வாகத்தாலும், 170 மீட்டர் மாநகராட்சி சார்பிலும் அமைக்கப்பட உள்ளது.

ரயில்வே நிர்வாகம் சார்பில் 37 மீட்டர் நீளத்துக்கான பணியை மேற்கொள்ள, மாநகராட்சி நிதியிலிருந்து ரூ.6.60 கோடி ஏற்கெனவே ரயில்வே நிர்வாகத்திடம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறும்போது, "ரயில்வே சுரங்கப் பாலம் அமைக்கும் பணி 18 மாதங்களில் நிறைவடையும். சென்னையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில் 85 சதவீதம் நிறைவடைந்துள்ளன. குழாய்கள், கேபிள்கள், மரங்கள், போக்குவரத்து இடையூறால் பணிகளில் தாமதம் ஏற்பட்டது.

பருவமழைக் காலத்தில் 3 மாதங்களுக்கு சில சிரமங்கள் ஏற்படும். அதன்பிறகு சென்னையில் எங்கும் மழைநீர் தேங்காது. மழை நீரை அகற்ற மாநகராட்சி சார்பில் 791 இடங்களில் மோட்டார் இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன" என்றார்.

இந்த நிகழ்ச்சியில், மேயர் ஆர். பிரியா, வடசென்னை எம்.பி. கலாநிதி வீராசாமி, எம்எல்ஏ ஐட்ரீம் ஆர். மூர்த்தி, துணை மேயர் மு.மகேஷ் குமார் மாநகராட்சி ஆணையர் ககன்தீப்சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இலவச மரக்கன்று பெற விண்ணப்பிக்கலாம்

வனத்துறை அழைப்பு

● சென்னை

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் பசுமை போர்வையை அதிகரிக்கும் விதமாக வனத்துறை சார்பில் வழங்கப்படும் இலவச மரக்கன்றுகளை பெற விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பாக வனத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது

தமிழகத்தில் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்தி, பசுமைப் போர்வையை விரிவுபடுத்தும் நோக்கில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தை முதல்வர் ஸ்டாலின் கடந்த செப். 24-ம் தேதி தொடங்கிவைத்தார். தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் மரம் வளர்ப்பை ஊக்குவித்தல் இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாகும். அதனடிப்படையில், விவசாயிகள், தொழில் நிறுவனங்கள், மக்கள் நலச் சங்கங்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் தனி நபர்கள் மரக்கன்றுகளை எளிதாகப் பெறும் பொருட்டு, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் இணைய தள முகவரியில் (*www.greentnmission.com*) பயனாளிகள் தங்களது சுய விவரங்களை பதிவு செய்து, தங்களுக்கு தேவையான மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம்.

> "தேவையான மரக்கன்றுகளை இணைய தளம், கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கலாம்"

வேளாண் பெருமக்கள், மரக்கன்றுகளை நடுவதற்கு தங்களுக்கு சொந்தமான நிலங்கள் பற்றிய விவரங்களுடன் தங்களுக்குத் தேவைப்படும் மரக்கன்றுகளை இணைய தளம் மூலமாகவோ அல்லது கடிதத்தின் வாயிலாக இயக்குநர், பசுமை தமிழ்நாடு இயக்கம், பனகல் மாளிகை, 8-வது தளம், சைதாப்பேட்டை, சென்னை-600 015 என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பாக கூடுதல் விவரங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பெற 18005997634 என்ற இலவச தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

தொழில்

தொழில் சேவை

Teak Round Logs / Raw Cashew Nuts for Sale, Please Call: 7200499000, Kingdom Exim, Tuticorin

வாடகை

வாடகைக்கு

3BHK FLAT for rent, near DAV sch, 22k + 3k, car prk, wardrobes, AC, UPS. 9841364689

பொது

பொது அறிவிப்பு

கடன் மீட்பு தீர்ப்பாயம்-II முன்பாக, டெல்லி
4வது தளம், ஜீவன் தாரா கட்டிடம், பார்லிமெண்ட் தெரு, புது டெல்லி-110001

1993-ம் ஆண்டு வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் ஏற்பட்ட கடன்களை வசூலிக்கும் சட்டத்தின் பிரிவு 19(4)-ன்கீழ் மற்றும் கடன் மீட்பு தீர்ப்பாயத்தின் (செயல்முறை விதி, 1993) விதி 12 மற்றும் 13-ன்கீழ் அறிவிப்பு

இது சம்மந்தமாக

OA எண்.492/2021 நாள்: 21.09.2022

பஞ்சாப் நேஷனல் பேங்க்
விண்ணப்பதாரர்
எதிர்
ஃபைவ் கோர் எக்ஸிம் லிமிடெட் மற்றும் ORS.
பிரதிவாதி

பெறுநர்
பிரதிவாதிகள்
(1) MS ஃபைவ் கோர் எக்ஸிம் லிமிடெட் மற்றும் ORS
பிளாசா, 3வது தளம், அறை 7 48, அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு.
மேலும் : WZ 15B அக்கர்சைன் மார்கெட் அசோக் நகர், புது டெல்லி, டெல்லி-110018
மேலும் : C 116 ஃபெத் நகர், திலக் நகர், புது டெல்லி, டெல்லி-110018.
(2) அமர்ஜீத் சிங் கல்ரா
C130 GF மற்றும் 2வது தளம், மன்சரோவர் கார்டன், புதுடெல்லி, டெல்லி-110015.
மேலும் : WZ 113 சன்ட்கார், புது டெல்லி, டெல்லி. **மேலும் :** 93 13 முன்ங்தா சென்ட்ரல், டெல்லி. **மேலும் :** C 116, ஃபெத் நகர், திலக் நகர், புது டெல்லி, டெல்லி.
(3) திருமதி. ஸ்ரீந்தர் கவுர் கல்ரா
C130 2வது தளம், மன்சரோவர் கார்டன், புதுடெல்லி, டெல்லி-110015.
மேலும் : WZ 15B அக்கர்சைன் மார்கெட் அசோக் நகர், புது டெல்லி, டெல்லி-110018
மேலும் : C 116 ஃபெத் நகர், திலக் நகர், புது டெல்லி, டெல்லி-110018.
மேலும் : 5/1 தரூஹரா, புது டெல்லி, டெல்லி. **மேலும் :** 104 உத்தம் நகர் விரிவு, புது டெல்லி, டெல்லி.
மேலும் : 2287 சாரை சாலை, கவுரியாபால், புது டெல்லி, டெல்லி.
மேலும் : C131 B மன்சரோவர் கார்டன், ரமேஷ் நகர், புதுடெல்லி, டெல்லி-110015.
மேலும் : WZ 40B/1A மனை எண்.22HB, மீனாக்ஷி கார்டன், புது டெல்லி, டெல்லி.
மேலும் : WZ 40B/1C மனை எண்.21 மீனாக்ஷி கார்டன், புது டெல்லி, டெல்லி.
மேலும் : WZ 40B/1A மனை எண்.20 மீனாக்ஷி கார்டன், புது டெல்லி, டெல்லி.

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர்(கள்) **ரூ.3,25,89,920.54/- (ரூபாய் மூன்று கோடியே இருபத்தி ஐந்து இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மற்றும் பைசா ஐம்பத்தி நான்கு மட்டும்)** வசூலிப்பதற்காக உங்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளார், இது சம்பந்தமாக சாதாரண முறையில் தங்களை தொடர்பு கொள்வதில் திருப்பியளிக்கவில்லை. எனவே, **03.11.2022 அன்று காலை 10.30 மணிக்கு** தீர்ப்பாயத்தில் நேரில் ஆஜராகுமாறு இந்த விளம்பரம் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட நாளில் நீங்கள் ஆஜராகவில்லை என்றால், நீங்கள் இல்லாத நிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

தற்போது நடந்து வரும் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, அனைத்து விஷயங்களும், வீடியோ கான்பரன்சிங் மூலம் நடத்தப்படும் மற்றும் அந்த நோக்கத்திற்காக:-

(1) அனைத்து வழக்கறிஞர்கள் / வழக்குதாரர்களும் "Cisco Webex" பயன்பாடு/மென்பொருளைப் பதிவிறக்க வேண்டும்:

(2) பதிவாளர்/மீட்பு அதிகாரி-1/மற்றும் மீட்பு அதிகாரி-2-ஆல் எடுக்கப்பட வேண்டிய வழக்குகளை விசாரிக்கும் தேதிக்கான **"மீட்டிங் ஐடி" மற்றும் கடவுச் சொல்** ஆகியவை தினசரி காரணப் பட்டியலில் DRT அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அதாவது drt.gov.in-ல் தெரிவிக்கப்படும்.

(3) வழக்கறிஞர்/வழக்கறிஞர்கள் எந்த ஒரு அவசர நிலையிலும் சம்பந்தப்பட்ட அதிகாரியை **போன் 23748478** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

21.09.2022 தேதியன்று என் கைப்பட மற்றும் தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் கொடுக்கப்பட்டது.

தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி
பிரிவு அதிகாரி, DRT-II, டெல்லி.

காலாண்டு விடுமுறையில் இணையவழி சிறப்பு வகுப்பு

தனியார் பள்ளிகள் மீது பெற்றோர் புகார்

● சென்னை

காலாண்டு விடுமுறையில் தனியார் பள்ளிகள் இணையவழியில் வகுப்புகள் நடத்தி வருவதாக பெற்றோர் புகார் தெரிவித்துள்ளனர்.

தமிழக பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 1 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கடந்த அக்டோபர் 1-ம் தேதி முதல் காலாண்டு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இந்த விடுமுறை முடிந்து 6 முதல் 12-ம் வகுப்புகளுக்கு அக்.10-ம் தேதியும், 1 முதல் 5-ம் வகுப்புகளுக்கு அக்.13-ம் தேதியும் மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. இந்த விடுமுறையில் முன் அனுமதியின்றி சிறப்பு வகுப்புகள் நடத்தக்கூடாது என்று கல்வித்துறை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை உட்பட சில மாவட்டங்களில் பல்வேறு தனியார் பள்ளிகள் முன் அனுமதியின்றி சிறப்பு வகுப்புகளை நடத்துவதாக புகார்கள் எழுந்துள்ளன. இது குறித்து பெற்றோர் சிலர் கூறும்போது, "விடுமுறையில் சிறப்பு வகுப்புகளை நடத்தக்கூடாது என்று பள்ளிக்கல்வித் துறை அறிவித்துள்ளது. அதை மீறி கடந்த 2 நாட்களாக தினமும் காலை 9 முதல் மாலை 4 மணி வரை இணையவழியில் தனியார் பள்ளிகள் வகுப்புகளை எடுத்து வருகின்றன.

முழு வேலை நாட்கள்போல் தினமும் 7 மணி நேரம் வகுப்பை கவனித்துவிட்டு, பின்பு வீட்டுப் பாடங்களை பிள்ளைகள் செய்ய வேண்டியுள்ளது. விடுப்பு காரணமாக பலர் தங்களின் சொந்த ஊருக்கும், சுற்றுலாவும் சென்ற நிலையில், தனியார் பள்ளிகளின் இத்தகைய செயல்பாடுகள் மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இந்த விவகாரத்தில் பள்ளிக்கல்வித் துறை தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தனர்.

திரைப்பட நகைச்சுவை நடிகர் போண்டா மணிக்கு

உதவுவதுபோல் நடித்து ரூ.1 லட்சம் பணம் மோசடி செய்த இளைஞர் கைது

ஏடிஎம் கார்டு மூலம் மருந்துக்கு பதில் நகை வாங்கினார்

● சென்னை

திரைப்பட நகைச்சுவை நடிகர் போண்டா மணிக்கு உதவுவதுபோல் நடித்து ரூ.1 லட்சம் மோசடி செய்த இளைஞரை போரூர் போலீஸார் கைது செய்தனர்.

பிரபல நகைச்சுவை நடிகர் போண்டா மணி (59). இவர், சென்னை போரூர், அய்யப்பன்தாங்கல் விஜினன் நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். கடந்த மாதம் அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு சினிமா துறையைச் சேர்ந்த சிலர் பண உதவி செய்தனர்.

போண்டா மணி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது பலரும் அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

அப்போது அவரது தீவிர ரசிகர் என்று கூறி, திருப்பூர் மாவட்டம் வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்த ராஜேஷ் பிரித்தீவ் (34) என்பவரும் சென்றார். அவர், உடல் நலம் விசாரிப்பது போல உடன் பழகினார். பின்னர், மருத்துவமனையில் போண்டா மணிக்கு தேவையான உதவிகளையும் செய்து வந்துள்ளார். இதனால், போண்டா மணியின் குடும்பத்தினரிடம் ராஜேஷ் நன்மதிப்பைப் பெற்றார்.

ராஜேஷ் பிரித்தீவ்.

இந்நிலையில் கடந்த மாதம் 27-ம் தேதி மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து போண்டா மணி வீடு திரும்பினார். அவருடன் ராஜேஷ் பிரித்தீவ்வும் சென்றார். அப்போது போண்டா மணியின் மனைவி மாதவி, தனது கணவரின் ஏடிஎம் கார்டை ராஜேஷ் பிரித்தீவ்விடம் கொடுத்து மருந்து வாங்கி வருமாறு அனுப்பி வைத்துள்ளார்.

தலைமறைவானர்

ராஜேஷ் பிரித்தீவ் ஏடிஎம் கார்டை பெற்றுச் சென்ற சிறிது நேரத்தில், சென்னையில் உள்ள பிரபலமான நகைக்கடை ஒன்றிலிருந்து மாதவியின் செல்போனுக்கு ரூ.1,04,941 மதிப்புள்ள நகை வாங்கியதாக குறுந்தகவல் வந்துள்ளது. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த மாதவி, உடனடியாக ராஜேஷ் பிரத்தீவ்வை போனில் தொடர்பு கொண்டார். ஆனால், அவர் போனை எடுக்கவில்லை; அப்படியே தலைமறைவாகிவிட்டார்.

பல வழக்குகளில் தொடர்புள்ளவர்

தாம், ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மாதவி, இதுகுறித்து போரூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர். இந்நிலையில், தலைமறைவான ராஜேஷ் பிரத்தீவை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், அவர் தினேஷ், சிவராமகுரு, தீனதயாளன், ராஜேஷ், பெருமாள் என பல்வேறு பெயர்களில் பல இடங்களில் மோசடியில் ஈடுபட்டிருப்பதும், அவர் மீது கோயமுத்தூர், சென்னை உட்பட பல்வேறு காவல் நிலையங்களில் குற்ற வழக்குகள் இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, போலீஸார் ராஜேஷ் பிரத்தீவ்வை பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

படிவம் G

இந்திய முழுவதும் பல்வேறு இடங்களில் பிளாஸ்டிக் தயாரிப்புகள் மற்றும் ஆட்டோ பாகங்கள் பிரிவில் செயல்படும் சின்டெக்ஸ்-BAPL லிமிடெட்-க்கான விருப்பம் தெரிவிக்க கோருதலுக்கான அழைப்பு

(திவால் நிலை மற்றும் திவால்நிலைகுழு ஆப் இந்தியா (நிறுவனங்களின் கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 36A(1)-ன்கீழ்)

தொடர்புடைய விபரங்கள்

1.	நிறுவன கடன்தாரர் பெயர் மற்றும் CIN எண்.	**சின்டெக்ஸ்-BAPL லிமிடெட்** U25199GJ2007PLC051364
2.	பதிவு அலுவலகத்தின் முகவரி	அபிஜீத்-1, 7வது தளம், மிதாகாலி ஆறு சாலைகள், எல்லீஸ்பிரிட்ஜ், அகமதாபாத், குஜராத்-380006
3.	இணையதளத்தின் URL	**http://www.sintexbapl.co.in/**
4.	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	இந்தியாவில் 12 உற்பத்தி நிலையங்கள் (i) Kalol – PP Division, (ii) Uluberia - PP Division, (iii) Namakkal – PP Division, (iv) Nalagarh – PP Division, (v) Buitibori – PP Division, (vi) Guwahati – PP Division, (vii) Pune – ICM Division, (viii) Sohna – ICM Division, (ix) Chennai 1 – ICM Division, (x) Chennai 2 – ICM Division, (xi) Pitampura – ICM Division, (xii) Hosur – ICM Division. நிறுவன கடன்தாரரின் மேலும் விவரங்கள் **http://www.sintexbapl.co.in/** என்ற இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட **"Teaser"** -ல் குறிப்பிடப்பட்டுள்ளன.
5.	பிரதான தயாரிப்புகள்/சர்வீஸ்கள் நிறுவப்பட்ட திறன்	(tables below)

5. **பிளாஸ்டிக் பொருட்கள் பிரிவு**

பிரிவு	வருடாந்திர ஆலை திறன் MT-ல் (மிக்ஸ் SKU)
பிளாஸ்டிக் செக்ஷன் (பிளஸ்)	9,360
ஷீட் மோல்டட் காம்பவுண்ட் (எஸ்எம்சி)	11,232
பைபர்-ரெயின்போர்ஸ்ட் பிளாஸ்டிக் (எப்ஆர்பி)	1,200
ROTO மோல்டிங்	32,556
புளோ மோல்டிங் (பிஎம்சி)	15,036
மொத்தம்	**69,384**

இந்தியன் கஸ்டம் மோல்டிங் (ஆட்டோ) பிரிவு

பிரிவு	வருடாந்திர ஆலை திறன் MT-ல் (மிக்ஸ் SKU)
புளோ மோல்டிங்	2,699
இன்ஜெக்ஷன் மோல்டிங்	12,628
தெர்மொசட்ஸ்	174
மொத்தம்	**15,502**

குறிப்பு : தொழில்நுட்பம், இயந்திரங்கள், தயாரிப்புகள் மற்றும் தயாரிப்புகள் அளவுகள் கலவையின் அடிப்படையில் திறன் பயன்பாடு கணக்கிடப்படுகிறது. கலவையில் ஏற்படும் எந்த மாற்றமும் திறன் மற்றும் திறன் பயன்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

6. கடந்த நிதியாண்டில் விற்கப்பட்ட பிரதான தயாரிப்புகள்/சர்வீஸ்கள் அளவு மற்றும் மதிப்பு

பிளாஸ்டிக் தயாரிப்புகள் பிரிவு FY 22

பிரதான தயாரிப்பு குரூப்	நிகல அளவு (MT-ல்)	மதிப்பு (INR கோடியில்)
தண்ணீர் டேங் (ROTO & BMC)	13,346	353
SMC & FRP	3,251	95

இந்தியன் கஸ்டம் மோல்டிங் (ஆட்டோ) பிரிவு FY 22

பிரதான தயாரிப்பு குரூப்	நிகல அளவு (MT-ல்)	மதிப்பு (INR கோடியில்)
இன்ஜெக்ஷன் மோல்டிங்	10,435	227.70

குறிப்பு : வெவ்வேறு தயாரிப்பு SKU-கள் வெவ்வேறு அளவீட்டு அலகுகளைக் கொண்டிருப்பதால், மேலே உள்ள உள்வேலை, சாத்தியமான அளவிற்கு மாற்றும் காரணியின் படி நிறுவனத்தின் குழுவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது

குறிப்பு : மொத்த விற்பனையில் 10% அல்லது அதற்கு மேல் பங்குபெறும் தயாரிப்புகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

7. பணியாளர்கள்/பணியாளர்களின் எண்ணிக்கை — **31.08.2022 அன்றுள்ளபடி**

பிரிவு	எண்ணிக்கை*
பிளாஸ்டிக் தயாரிப்புகள்	1,807
இந்தியன் கஸ்டம் மொல்டிங் (ஆட்டோ)	1,231

குறிப்பு* : ஊழியர்கள், நிரந்தர தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட

8	இரண்டு வருடங்களின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடன்தாரர் பட்டியல், செயல்முறையின் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கான தொடர்புடைய தேதிகள் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் இங்கே கிடைக்கும்	CIRP இணையம் http://www.sintexbapl.co.in/ -ல் பார்க்கவும் அல்லது **RP.SintexBAPL@IN.GT.COM** மின்னஞ்சலில் அனுப்பவும்.
9.	பிரிவு 25(2)(h) ன்கீழ் தகுதியான தீர்வு விண்ணப்பதாரர்களுக்கான தகுதி குறியீடு கிடைப்பது	விருப்பம் தெரிவித்தல் கோருதல் (EOI) செயல்முறை ஆவணத்தை பார்க்க CIRP இணையம் **http://www.sintexbapl.co.in/** -ல் பார்க்கவும் அல்லது **RP.SintexBAPL@IN.GT.COM** மின்னஞ்சலில் அனுப்பவும்.
10.	விருப்ப வெளிபாடு கோருதல் பெறுவதற்கான கடைசி தேதி	14.10.2022*
11.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்பட்ட தேதி	24.10.2022*
12.	தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	29.10.2022*
13.	EOI சமர்ப்பிக்க செயல் மின்னஞ்சல் ID	**RP.SintexBAPL@IN.GT.COM**

***CoC ஒப்புதலுக்கு உட்பட்டது.**

குறிப்பு : மேலே திருத்தப்பட்ட காலக்கெடு, CIRP காலக்கெடுவிலிருந்து குறிப்பிட்ட நேர விலக்கிற்கு உட்பட்டது, தீர்ப்பளிக்கும் அதிகாரியால் வழங்கப்பட்டது.

குறிப்பு: RP-ல் வெளியிடப்பட்ட 22.09.2022 தேதியிட்ட படிவம்-G-க்கு இணங்க தங்கள் EOI -ஐச் சமர்ப்பித்த சாத்தியமான தெளிவுத்திறன் விண்ணப்பதாரர்கள் புதிய EOI-களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

Sd/-
ஆஷிஷ் சஹவ்சஹரியா
(IBBI/IPA-001/IP-P00294/2017-18/10538)
சின்டெக்ஸ்-BAPL லிமிடெட்-க்கான தீர்மான வல்லுநர்
மின்னஞ்சல்: **RP.SintexBAPL@in.gt.com**
IBBI -ல் பதிவு செய்யப்பட்டது:
கிராண்ட் தோரன்டன், 10சி ஹங்கர்போர்ட் தெரு, கொல்கத்தா - 700017, மேற்கு பெங்கால்
மின்னஞ்சல்: **Ashish.Chhawchharia@in.gt.com**

நாள் : 07.10.2022
இடம் : அகமதாபாத்

அரசியல், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

தலைமையகம் தக்ஷின் பாரத்

முன்னாள் இராணுவத்தினருக்கான நலத்திட்ட முகாம் - 2022

சிறப்பம்சங்கள்
- பன்முக மருத்துவ முகாம்
- ஒய்வூதியம் தொடர்பான பிரச்சினைகள்.
- NOK இன் ஆவணங்கள்
- ECHS அட்டை தொடர்பான சிக்கல்கள்
- வங்கி தொடர்பான பிரச்சினைகள்
- ஆதார் அட்டை தொடர்பான பிரச்சனைகள்
- ZSBகள் மற்றும் DPDO-க்களுடன் தொடர்பு
- கேண்டீன் அட்டைகளை செயலாக்குதல்
- DIAV இணையதளத்தின் பதிவு
- SPARSH விழிப்புணர்வு
- மதிய உணவு

நாள்: 15th அக்டோபர் 2022
நேரம்: 0900-1700 HRS
இடம்: காவல் நலக்குழு மண்டபம்
நுழைவு: வேலூர் கோட்டையின் பின்புறம் & சிப்பாய் வாரிய அலுவலகம்

" தமிழ்நாடு மாநிலத்திற்கு மட்டும் "

தொடர்புக்கு
8764733663
9894509738

MANALI PETROCHEMICALS

மணலி பெட்ரோகெமிகல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: "ஸ்பிக் ஹவுஸ்", 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை 600 032
நிஅஎ: L24294TN1986PLC013087, வலைதளம்: www.manalipetro.com
மின்னஞ்சல்: companysecretary@manalipetro.com
தொலைபேசி / தொலைநகல் எண்: 044 - 2235 1098

பொது அறிவிப்பு

சென்னை, திருவொற்றியூர் வட்டம், சாத்தாங்காடு கிராமத்தில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் ஆலையில் புரோப்பிலீன் கிளைக்கால் உற்பத்தித் திறனை ஆண்டிற்கு மேலும் 50,000 மெட்ரிக் டன் அளவில் விரிவுபடுத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் சுற்றுச்சூழல் அனுமதி அளித்துள்ளது.

இந்த அனுமதிக் கடிதத்தின் நகல்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் / அமைச்சகத்தின் வல்லுநர் குழுவிடம் உள்ளன. இதை அமைச்சகத்தின் இணையதளத்திலும் https://parivesh.nic.in/ காணலாம்.

மணலி பெட்ரோகெமிகல்ஸ் லிமிட்டடுக்காக
மு கார்த்திகேயன்
இஅஎ: 08747186
முழு நேர இயக்குனர் (செயல்பாடுகள்)

இடம்: சென்னை
தேதி: 07.10.2022

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).